சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

மனு எண். எம்.சி.ஓ.பி. 165/2019

PW - 3

2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திருமதி.பி.மோகனவள்ளி, பி.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | காஜாமைதீன் |
| க.பெ. (அ) த.பெ. | சாகுல் ஹமீது |
| வயது | 36 |
| முகவரி | மார்க்கெட்ரோடு , பொள்ளாச்சி |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

1.மசாஆ - 18- எனது ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது).

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது சிப்ஸ் தயாரிக்கும் வேலை செய்து வருகிறேன். மனுதாரர் வழக்கறிஞர் தான் சாட்சியம் அளிக்க அழைத்தார். பிரமாண வாக்குமூல விபரங்கள் எனக்கு தெரியும். வழக்கு குறித்து நான் தான் புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

விபத்து நடைபெற்ற இடம் சுந்தரபுரி ஆகும். சுந்தரபுரிக்கு தென்புறமாக விபத்து நடைபெற்றது. சம்பவ இடம் வளைவான பகுதி முடிந்து நேரான பகுதியாகும். என்னுடன் வேறு யாரும் வரவில்லை. நான் Splender வாகனத்தில் சென்றேன். அந்த வாகனம் என் நண்பர் கலீருக்கு சொந்தமானது. விபத்தை 20 அடி தூரத்தில் பார்த்தேன். விபத்து நடந்த சமயம் காட்டில் வேலை செய்தவர்கள் இருந்தார்கள். அவர்களை அடையாளம் தெரியாது. விபத்து நடைபெற்ற இடத்தில் அருகில் கட்டிடங்களோ வீடுகளோ இல்லை, வாய்க்கால்தான் உள்ளது. நான் அளித்த புகாரில் சுந்தரபுரி அபாய வளைவில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தபோது வடமக்கு நோக்கி அதிவேகமாகவும் அஜாக்ரதையாகவும் வந்த வனதுறைக்கு சொந்தமான ஈச்சர் வண்டி சைடு பகுதியில் என் அக்கா மகன் ஓட்டிய பைக் மீது மோதியது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காவல் துறையினர் மருத்துவமனைக்கு வந்துவிட்டார்க்ள என்றால் சரிதான். அதன் பிறகு நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். ஜான்ஷா ஷரீப் தனியாகத்தான் வந்தார். நாங்கள் இருவரும் ஒரே பள்ளிவாசலுக்குத்தான் சென்றோம், ஆனால் தனித்தனி வாகனத்தில் சென்றோம் என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் இறந்தவர் என் அக்கா மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்ச ரியல்ல. எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது, அதை நீதிமன்றங்ததில் தாக்க்ல செய்யவில்லை. என் அக்கா மகனிற்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. எங்கள்

இருவருக்கும் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் அதனால்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு இறந்துபோனவர்தான் காரணம் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி